1974 சனவரி 22]

தீர்த்துக்கொள்ளவும் அது வாய்ப்பாக இருக்குமாதலால் இதை வற்புறுத்தி நாமே நேரடியாக உதவி செய்வதற்கு தக்க நடவடிக்கைகளை பல முனைகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்கான நடவடிக்கைகள் பல முனைகளில் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : பற்றாக்குறை மாநிலங்களுக்கு நேரடியாக அரிசி அனுப்ப முடியாதது குறித்துச் சொல்லி நேரடியாக அனுப்ப ஒரு முடிவு ஏற்பட வேண்டுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதற்கு முன்னால் தமிழ்நாட்டுக்குத் தேவையான கோதுமை குறித்து மத்திய அரசிடம் நம் அரசு கேட்டிருக்கிறதா ? கோதுமைப் பொருள்கள் இன்று எந்தப் பிரதேசத்திலும் கிடைக்காத ஒரு நிலைமை இருக்கிறது. ஆகவே கோதுமை, கோதுமைப் பொருட்கள் மத்திய அரசின் மூலம் நமக்குக் கிடைப்பதற்கு மாநில அரசு ஏதாவது வழிவகை செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : இதற்குச் சம்பந்தப்படாத கேள்வியாக இருந்தாலும் 35,000 டன் கொடுத்து வந்தது இப்போது 10,000 டன்தான் இரண்டு மூன்று மாதங்களாக கொடுத்துக் கொண்டு வருகிறார்கள். மேலும் அதிகம் வேண்டுமென்று ஜனவரியில் பக்ரீத் பண்டிகைக்கும் பொங்கலுக்கும் தனியாக ஒரு ஆயிரம், இரண்டாயிரம் டன் கொடுக்க வேண்டுமென்று கேட்டோம். மத்திய அரசு கொடுக்கவில்லை. கோதுமை பற்றாக்குறை காரணமாக தமிழ்நாடு வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது.

*84 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கேரள மாநிலத்திற்கு ஆண்டுக்கு 15 ஆயிரம் டன் அரிசி தருவதென நமது அரசு வாக்குறுதி அளித்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) சிறுவாணி திட்டப் பணியைத் தொடங்கி வைத்தபோது முதலமைச்சர் கேரளாவுக்கு ஒவ்வோர் ஆண்டும் 15,000 டன் அரிசி வழங்கப்படும் என்று அறிவித்தார். ஒரு மாநிலத்தில் உபரியாக

உள்ள நெல், அரிசி, பற்றாக்குறையாக உள்ள மாநிலங்களுக்கு இந்திய அரசின் ஒதுக்கீடுகளையொட்டி மத்தியத் தொகுப்பு மூலம் வழங்கப்பட வேண்டுமாதலால். அவ்வாறு கேரளாவுக்கு வழங்குவதற்கு இந்திய அரசின் இசைவு தேவைப்படுகிறது. எனவே, இந்திய அரசின் இசைவைப் பெறுமாறு கேரள முதலமைச்சர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

* 85 வினா.—**திரு. வை. பாலசுந்தரம்:** மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 3,000 டன் அரிசி கேட்டு கேரள முதல்வரிடமிருந்து தமிழக முதல்வருக்கு அவசரக் கடிதம் ஏதேனும் அனுப்பப்பட்டதா ?

(இ) ஆம் எனில், கேரள அரசுக்கு 3,000 டன் அரிசி தமிழ்நாடு அரசு வழங்கியதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) & (இ) ஆம். கேரள முதல்வர், தமிழ்நாடு முதல்வரை ஓனம் பண்டிகைக்கு முன்பாக 3,000 டன் அரிசியை உடனடியாகத் தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டதற்கிணங்கி, தமிழ்நாடு அரசு 3,000 டன் அரிசி வழங்க ஒப்புக் கொண்டது.

திரு. வை. பாலசுந்தரம்: கேரளாவிற்கு வழங்குகிற அரிசியை வைத்துக்கொண்டு—கேரளாவோடு ஏதாவது ஒப்பந்தத்தின் அடிப்படையில் அரிசி வழங்கப்பட்டிருக்கிறதா ? அதனால் ஏதாவது பயன் உண்டா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: கேரளாவோடு சிறுவாணி நீர் சம்பந்தமாகப் பேசுகிறபோது கேரளா முதல் அமைச்சர் அவர்கள் 15,000 டன் அரிசி ஆண்டுதோறும் வேண்டுமென்று கேட்டார்கள். அப்படி ஆண்டுதோறும் கொடுப்பதாக வாக்குறுதி கொடுத்து, மத்திய அரசின் அனுமதி வேண்டும் என்பதற்காக அனுப்பியிருக்கிறோம். அதை அனுமதிக்க வேண்டும் என்று நாம் கேட்டிருக்கிறோம். கேரளா முதல் அமைச்சர் அவர்களும் அதை அனுமதிக்க வேண்டுமென்று மத்திய அரசைக் கோரியுள்ளார்கள்.